1987 ஏப்ரல் 30]

5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

87. ஈரோட்டில் நகரப் பேருந்துகளாக ஓடிக்கொண்டிருக்கும் மோட்டார் வண்டிகள் தொடர்பாக ஏற்பட்ட இழப்புத் தொகையான 98,820 ரூபாய்க்கான வரியினை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 7—1—1987-ஆம் நாளிட்ட 42 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

88. பாண்டிச்சேரியைச் சுற்றியுள்ள தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அதிகார வரம்பெல்லைக்குட்பட்ட மூன்று சோதனைச் சாவடிகளுக்கான செயல்பாட்டினைக் கவனிக்கும் பொறுப்பினை விழுப்புரம் உதவி ஆணையருக்கு (செயல்படுத்தும் பிரிவு) வழங்குவது குறித்து வணிகவரிகள்—சமய அடிக்கட்டளைத் துறையின் 30—1—1987 ஆம் நாளிட்ட 78 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

89. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 11—12—1986 ஆம் நாளிட்ட 3436 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

200. கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS